R 4780 (page 78)

# ஞானமான தேர்வு

## THE WISE CHOICE

“யாரை சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்; நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்." - யோசுவா 24:15

இஸ்ரயேலர்கள் யோர்தானை கடந்திருந்தார்கள். மோசே மரித்துவிட்டார், யோசுவாதான் அவர்களது தலைவராக இருந்தார். அந்த சமயத்தில் அவர்களுக்கு கஷ்டம் ஏதுமில்லை. ஆகையால் கர்த்தருக்கு உண்மையாக இருப்பதா அல்லது இல்லையா அல்லது கானானியர்கள் பின்பற்றின சிலை வழிப்பாட்டை பின்பற்றுவதா என்பதை அவர்கள் முடிவு செய்வதற்கு இதுவே சரியான நேரம் என்று யோசுவா நினைத்தார். யோசுவா அவர்களை அழைத்து கூடிவரச் செய்து, அவர்கள் அனுபவித்த மாபெரும் கர்த்தருடைய ஆசீர்வாதங்களையும் ஆதரவுகளையும் எடுத்துக்கூறி, அதன்பிறகு நமது தலைப்பு வசனத்தின் உயர்ந்த உணர்வுகளையும் வெளிப்படுத்தினார்.

ஆகையால் அன்பான நண்பர்களே, கடந்த காலத்தில் கர்த்தர் நமக்கு அளித்து வந்த ஆசீர்வாதங்களையும், பாதுகாத்து பராமரித்து வந்ததையும் உணர்ந்து வாழ்க்கையில் எந்த மார்க்கத்தை பின்பற்றுவீர்கள் என்பதை தீர்மானியுங்கள். நீங்கள் நல்ல தீர்மானத்தை எடுத்தால் குணலட்சணங்களை உருவாக்குவதில் மாபெரும் ஆசீர்வாதமும் உதவியும் கிடைக்கும். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எந்த காரியத்தைக் குறித்தும் நாம் ஒரு ஞானமான தீர்மானத்தை எடுத்தோமானால், அது நமது மனதையும் குணலட்சணத்தையும் பலப்படுத்தி, ஒரு வேளை அடுத்த சோதனைக்கு நம்மைத் தயார்படுத்தும்.

கிறிஸ்தவர்கள் செய்யும் முழு அர்ப்பணம் எதையும் விட்டு வைக்கிறதில்லை என்கிற உண்மையை நாம் அங்கீகரிக்கிறோம். ஆனால் மனமானது சீக்கிரமாக ஒரு முடிவை எடுப்பதற்கு ஒரு உரைகல் நமக்கு தேவைப்படுகிறது. இந்த உரைகல் தேவனுடைய சித்தமாக இருக்க வேண்டும். அதன் மூலம் எந்த காரியத்தைக் குறித்தும் தாமதமில்லாமல் தேவனுடைய சித்தத்தை உணர வேண்டும். மறுபடியும் நமது அர்ப்பணத்தை உறுதிப்படுத்துவது மிகவும் சரியானதாக இருக்கும். இப்படியாக மற்றவர்களுக்கு முன்பாக பிரபலப்படுத்த வேண்டும்.

உதாரணத்திற்கு, இது புது வருட நாளாக இருந்து, நாம் சாட்சிக்கூட்டத்தில் இருந்தால், வேறு யாராவது என்ன செய்தாலும் நான் தேவனையும் அவருக்கு ஊழியம் செய்வதையுமே அங்கீகரிப்பேன் என்று கூறுவதில் தவறு ஏதும் இல்லை. இது புது தீர்மானம் இல்லை. நமது அர்ப்பணத்தின் ஒரு புதிய அங்கீகாரம். இது முன்னரே எடுத்த தீர்மானமாக இருக்கிறது.

ஒவ்வொரு நாளும் நாம் செய்யும் புது உடன்படிக்கைக்கும் நமது உடன்படிக்கையை அனுதினமும் புதுபித்தலுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். ஒன்று முறையற்றதாக இருக்கும்; இன்னொன்று சரியானதாக இருக்கும். நாம் நமது ஜீவன் உள்ளவரைக்கும் உடன்படிக்கையை செய்திருந்தால், அதை உடைப்பது பற்றி நினைக்கவே கூடாது. அது ஒரு மனிதன் ஒரு வீட்டை விற்றது போல அல்லது குத்தகைக்கு விடப்பட்டது போல இருக்கும்.

அனுதினமும் கர்த்தருடனான நமது உடன்படிக்கையை நாம் புதுப்பிக்க வேண்டும். புதுப்பித்து நமது மனதில் அதை புதியதாக்க வேண்டும். இப்படியாக நமது பங்கில் எந்த மாற்றமும் இல்லை என்று காண்பிக்க வேண்டும். அதாவது இன்னும் நாம் அதே மனோபாவத்தில் இருக்கிறோம் என்பதை காண்பிக்க வேண்டும். இது நாம் அர்ப்பணம் செய்த போது இருந்த அதே சிந்தையாகும். நாம் கிறிஸ்துவுடன் இருக்கிறோம். "நீங்கள் உங்களுடையவர்கள் அல்ல, நீங்கள் கிரயத்துக்கு கொள்ளப்பட்டீர்கள்." நமது ஜீவியத்தை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்றும் நமது உடன்படிக்கையை அனுதினமும் புதுப்பிக்க வேண்டும் என்றும் நாம் அறிவுறுத்தப்படுகிறோம். இதை நமது இருதயத்துக்கும் மனதுக்கும் முன்பாக தொடர்ந்து வைத்துக்கொள்ளவும், நமது பலியை கர்த்தருக்கு செலுத்தவும் அறிவுறுத்தப்படுகிறோம். இப்படியாக நாம் அவருடைய மரணத்துக்குள்ளான ஞானஸ்நானத்தை நாம் பெற்றிருக்கிறோம். இந்த ஞானஸ்நானம் நமது கர்த்தருடையதைப் போல தொடர்கிறது. அவர் அர்ப்பணம் செய்திருந்தார். ஆகையால் அது நிறைவேற்றப்பட வேண்டும். அதே போல நாமும் நிறைவேற்ற வேண்டும். நமது அர்ப்பணம், நமது உறுதிமொழி மரணபரியந்தம் இருக்கிறது.

அர்ப்பணம் செய்த கர்த்தருடைய பிள்ளைகளின் வாழ்க்கையின் பிரதான நோக்கமெல்லாம் ஒருபுள்ளிக்கு கொண்டு வரப்பட்டால், கர்த்தருடைய ஆவியை, பரிசுத்தத்தின் ஆவியை, சத்திய ஆவியை, கிறிஸ்துவின் ஆவியை, பலமும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியை அதிக அளவில் அவர்களது ஜெபத்தில் கேட்டால் எவ்வளவு ஓர் ஆசீர்வாதமாக இருக்கும்! அவர்கள் அவருடன் விடியும் வரை போராடினால், அவர்கள் விரும்பிய ஆசீர்வாதங்களை நிச்சயமாய், கொண்டு வரும். அந்த ஆசீர்வாதத்தை கொடுக்கும் நோக்கத்தை கர்த்தரே வெளிப்படுத்துவார். ஆனால் நாம் அதை உணர்ந்து விரும்பும் வரை அதை நிறுத்தி வைக்கிறார்.

---